

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு69க்குட்பட்ட முத்துகுமரப்பா தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.13.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளை நேற்று (28.08.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, மேயர் ஆர். பிரியா, துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையர் எச். ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

# துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு – பயனாளிகளுக்கு உரிய ஆவணங்கள் வழங்கினார்!

சென்னை,ஆக.29-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 5 வார்டு-59 சென்னை, கீழ்பாக்கம் செகரட்டிரியேட் காலனியில் நேற்று (28.8.2025) வியாழக்கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி. கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம். 5 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 139 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்.

ஆதார் இணைய சேவைகள் மனு 60 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 26 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்



சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணபப்ங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 3 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 3 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் -69 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 1மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -1 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -171 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -246 என மொத்தமாக 923 மனுக்கள் பெறப்பட்டு அதில் 899 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி, மண்டல குழு தலைவர் பி. ஸ்ரீராமுலு, வட்டக் கழகச் செயலாளர் டி சதீஷ்குமார் மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு அரசின் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம், சென்னை, அண்ணாநகர் மண்டலம் 8, 103 வது வட்டம் பகுதியில் நேற்று (28.08.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் பரமசிவம், திமுக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் மாமன்ற உறுப்பினர் புஷ்பலதா ஜெய்சங்கர், வட்டக் கழக செயலாளர்கள் ஜெய்சங்கர், அருள் கண்ணன் மாநகராட்சி மண்டல அதிகாரி சுந்தர்ராஜன், ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு, தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

## சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## இன்று 8 வார்டுகளில் நடைபெறகிறது!

சென்னை, ஆக. 29–

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (29.08.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்–1), வார்டு–13ல் எம்.ஜி.ஆர். சாலை சுங்கச்சாவடி, ஆர்.பி.சி. பொதுப் பள்ளி, மாதவரம் மண்டலம் (மண்டலம்–3), வார்டு–25ல் மாதவரம் வடச்சாலையில் உள்ள வீட்டுவசதித் துறை விளையாட்டு மைதானம், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்–4), வார்டு–40ல் புது வண்ணாரப்பேட்டை, திருவள்ளுவர் நகரில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி, இராயபுரம் மண்டலம் (மண்டலம் – 5) வார்டு–60ல் ஜார்ஜ் டவுன், அங்கப்பன் நாயகன் தெருவில் உள்ள சென்னை உருது நடுநிலைப்பள்ளி, திரு.வி.க. நகர் மண்டலம் (மண்டலம்–6), வார்டு–65ல் கொளத்தூர், பள்ளிச் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி, தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்–9), வார்டு–122ல், நந்தனம், 2வது குறுக்கு டர்ன்ஸ்புல் சாலையில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம், பெருங்குடி மண்டலம் (மண்டலம்–14), வார்டு–188ல், மடிப்பாக்கம், பாலையா கார்டன், பஜனைக்கோயில் தெருவில் உள்ள ருக்மணி மஹால், சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம் – 15) வார்டு–199 சோழிங்கநல்லூர், அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய 8 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் ”உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## மதுரவாயல் 153வது வட்டத்தில்

# ரூ.90.57 லட்சம் மதிப்பீட்டில் விளையாட்டுத் திடல்!

## திட்டப் பணியை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

சென்னை, ஆக.29-

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-153, ராமகிருஷ்ணா நகர் அரிவரசன் சாலையில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலம் ரூ.90 இலட்சம் 57 ஆயிரம் மதிப்பீட்டில் விளையாட்டுத் திடலில் உள் விளையாட்டு அரங்கம் (இறகுப்பந்து) கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டும் பணியை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-153, போரூர், ராமகிருஷ்ணா நகர் அரிவரசன் சாலையில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலம் ரூ.90 இலட்சம் 57 ஆயிரம் மதிப்பீட்டில் விளையாட்டுத் திடலில் உள் விளையாட்டு அரங்கம் (இறகுப்பந்து) கட்டும் பணிக்கு நேற்று (28.08.2025) காலை மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மண்டலம்-11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி கழக துணை செயலாளர் இரா.பால்பாண்டியன், வட்ட செயலாளர் தி.சார்லஸ், மாமன்ற உறுப்பினர் சாந்தி ராமலிங்கம், மாவட்டப் பிரதிநிதி கோ.இராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.


